பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள், சென்னை- 600 002

ந.க.எண்.6523/அ1/2023 நாள். 19.12.2023

பொருள்: பணியாளர் தொகுதி - பொது நூலக இயக்ககம் - மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் - நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடம் - 01.01.2023 நாளின்படியான மாநில அளவிலான இறுதிப் பணிமூப்புப் பட்டியல் – வெளியிடப்படுகிறது

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.1735, கல்வித் துறை, நாள் 11.12.1989.
2. அரசுக் கடிதம் (நிலை) எண்.769, கல்வித் (கே2) துறை, நாள் 06.06.1990.
3. அரசாணை (நிலை) எண்.60, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 27.04.2006.
4. அரசாணை (நிலை) எண்.171, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 13.09.2006
5. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்கள் 24947, 24250, 18231, 18232, 18233, 18707 மற்றும் 36061/2007-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 08.04.2009.
6. அரசாணை (நிலை) எண்.107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2009.
7. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு மனு எண்கள்.1173/2010 - 1178/2010, 911/2009 - 919/2009 மற்றும் 520/2009 - 522/2009 மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 20.09.2010.
8. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2010.
9. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.114/2010-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 06.12.2010.
10. அரசாணை (நிலை) எண்.65, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எஸ்) துறை, நாள் 02.07.2014.

11. உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்கள் Civil Appeal Nos.1100 - 1103 of 2015-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 21.01.2015.
12. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.20475/2012-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 19.01.2017.
13. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.202/2017-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 12.04.2017.
14. அரசாணை (நிலை) எண்.144, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 20.11.2017.
15. உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்கள் 1611 – 1614 of 2017-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 24.01.2018.
16. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு மனு எண்.W.A.No.213/2018-இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 19.07.2019
17. பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.6523/அ/2023, நாள்.06.11.2023
18. பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைக் கடிததங்கள்

----------

பார்வையில் காணும் (1) முதல் (4) வரையுள்ள அரசாணைகள், அரசுக் கடிதம் மற்றும் பார்வை (5), (7), (9), (11), (12), (13), (15) மற்றும் (16)-இல் காணும் சென்னை உயர்நீதி மன்றம் / உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணைகள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களின் மீது பெறப்பட்ட தீர்ப்பாணைகளின்படி, பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றி வரும் நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடங்களுக்கு

01.01.2023 நாளின்படியான மாநில அளவிலான வரைவுப் பணிமூப்புப் பட்டியல் (Draft Seniority List) பார்வை (17)-இல் காணும் இவ்வியக்ககச் செயல்முறைகளில் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு மாவட்ட நூலக அலுவலர்கள் மூலம் தொடர்புபடுத்தப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, மேற்காணும் பணிமூப்புப் பட்டியல் குறித்து சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து மாவட்ட நூலக அலுவலர்கள் மூலம் பெறப்பட்ட கீழ்க்காணும் ஆட்சேபனைகள் / மறுப்புரைகள் மற்றும் அதற்கான பதில் விவரங்கள் மற்றும் பணிமூப்புப் பட்டியலில் உள்ள விடுதல் அல்லது பிழைகள் (Factual Errors) குறித்து மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சரிசெய்யப்பட்ட திருத்தங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பெறப்பட்ட ஆட்சேபனைகள் | தெரிவிக்கப்படும் விவரம் |
|---|---|---|
| 1 | முருகனாந்தம்(170) (அரியலூர்) என்பவர் பணி மூப்புப் பட்டியலில் பெயர் பிழை திருத்தம் செய்து தருமாறு வேண்டியுள்ளனர். | பணிமூப்புப் பட்டியலில் பெயர் பிழை திருத்தம் குறித்து மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. |
| 2 | பணிமூப்புப் பட்டியலில் தற்காலிகமாக பதவி உயர்வு துறப்பு செய்துள்ள விவரம் பதிய வேண்டியுள்ளனர்.<br>1. திருமதி. எஸ். சீதாலட்சுமி(2) /(24.12.2020) (மதுரை)<br>2. திரு. எஸ். அழகர்சாமி (3) / (30.12.2021) (தூத்துக்குடி) | பணிமூப்புப் பட்டியலில் தற்காலிகமாக பதவி உயர்வு துறப்பு விவரத்தினை பதிவு செய்ய மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சரிசெய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | 3. திருமதி. எ. சாந்தினி, (4), / (28.12.2021)(மதுரை)<br>4. திரு.செ.குமார்(5) / 26.09.2022 (ஈரோடு) | |
| 3 | பணி மூப்புப் பட்டியலில் விடுப்பட்ட கல்வித் தகுதி மற்றும் கல்வித் தகுதி பிழை திருத்தம் செய்து தருமாறு கீழ்க்காணும் பணியாளர்கள் வேண்டியுள்ளனர்.<br>1) திரு.எம்.ஆனந்தகணேசன்(36)<br>2) திருமதி.மா.இராஜேஸ்வரி(109)<br>3) திரு.சு.பாலசுப்பிரமணியன்((136)<br>4) திரு. ஜோ. சுப்பிரமணி (16) | பணிமூப்புப் பட்டியலில் விடுப்பட்ட கல்வித் தகுதி மற்றும் கல்வித் தகுதி பிழை திருத்தம் குறித்து மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. |
| 4 | அரசுப் பணியில் சேர்ந்த நாள் திருத்தம் செய்து தருமாறு கீழ்க்காணும் பணியாளர்கள் வேண்டியுள்ளனர்<br>திரு.த.இரவிச்சந்திரன்(140)<br>திரு.பி.இரகநந்தனன்(149) | பணிமூப்புப் பட்டியலில் விடுப்பட்ட நுழைவுப் பணியிட விவரம், பணியில் சேர்ந்த நாள், கல்வித் தகுதி மற்றும் கல்வித் தகுதி பிழை திருத்தம் குறித்து மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சரிசெய்யப்பட்டுள்ளது |

**பல்வேறு மறுப்புரைகள்**

(1) திருவண்ணாமலை மாவட்ட நூலக ஆணைக்குழுவில் இரண்டாம் நிலை நூலகராகப் பணியாற்றும் திரு.அ.சாய்ராம் என்பவர், 19.12.2008-இல் தனியரால் இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வு துறப்பு செய்யப்பட்டதைக் கருதாமல், சென்னை உயர் நீதிமன்றத்தின் 20.09.2010 நாளிட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில், இரண்டாம் நிலை நூலகராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டதன் அடிப்படையில்

பணிமூப்புப் பட்டியலை 01.01.2011 நாளின்படி இறுதி செய்து, தனது பணி மூப்பினை வ.எண்.43-லிருந்து வ.எண்.4-க்கு அடுத்து நிர்ணயிக்குமாறு வேண்டியுள்ளார்.

- மேற்காணும் மறுப்புரை குறித்து, திரு.அ.சாய்ராம் (திருவண்ணாமலை) என்பவர் டிசம்பர் 2008-ஆம் ஆண்டில் மாநில அளவில் வழங்கப்பட்ட இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வினை துறப்பு செய்துள்ளார். எனவே, தனியர் 01.01.2011 அன்று பதவி உயர்விற்கு தகுதியற்றவரான நிலையில், தனியரது கோரிக்கை ஏற்க இயலாது. பணிமூப்புப் பட்டியலில் தனியரது பெயர் விதிமுறைகளின்படி தகுதியுள்ள இடத்தில் (43) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(2) நீலகிரி மாவட்ட நூலக ஆணைக்குழுவில் இரண்டாம் நிலை நூலகராகப் பணியாற்றும் திரு.ஜே.சுப்ரமணி (16) என்பவர், நீலகிரி மாவட்ட நூலக ஆணைக்குழுவில் 23.01.1993 அன்று பயிற்சிபெறா மூன்றாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்துள்ளதாகவும், தற்போது நீலகிரி மாவட்ட நூலக ஆணைக்குழுவில் இரண்டாம் நிலை நூலகராகப் பணியாற்றும் திரு.எல். கிளமென்ட் என்பவர் சேலம் மாவட்ட நூலக ஆணைக்குழுவில் 20.09.1993 அன்று பயிற்சிபெறா மூன்றாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்துள்ளதாகவும், இந்நிலையில், நூலகத் துறையால் நடத்தப்பட்ட நூலகவியல் பயிற்சிக்கு திரு.எல்.கிளமென்ட் என்பவர் 1994-ஆம் ஆண்டு அனுப்பப்பட்டு தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், ஆனால், மேற்காணும் நூலகவியல் பயிற்சிக்கு தன்னை 1995-ஆம் ஆண்டு அனுப்பப்பட்டதன் காரணமாக திரு.எல்.கிளமென்ட் பணிமூப்பில் தனக்கு முன்னால் இடம் பெற்றுள்ளார் எனத் தெரிவித்து, இதனை சரி செய்யுமாறு திரு.ஜே.சுப்ரமணி என்பவர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் மறுப்புரை குறித்து, மாவட்ட பணிமூப்பினை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிபெறா மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்திற்கு நியமன அலுவலர் மாவட்ட நூலக அலுவலர் ஆவார். மேலும், சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக அலுவலர்களால் நூலகவியல் பயிற்சிக்குப் பரிந்துரைக்கப்படும் அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுவில் மாவட்டப் பணிமூப்பில் முதுநிலையில் உள்ள பயிற்சிபெறா மூன்றாம் நிலை நூலகர் பட்டியலின் அடிப்படையில் நூலகத் துறையால் நூலகவியல் பயிற்சி வழங்கப்பட்டது. எனவே, மாவட்ட பணிமூப்பு நடைமுறையிலுள்ள ஒரு பணியிடத்திற்கு, நீலகிரி மாவட்டம் சார்ந்த தனியர் சேலம் சார்ந்த பணியாளரை ஒப்பிட்டு பணிமூப்பு கோரியதை விதிமுறைகளின்படி ஏற்க வழிவகை இல்லை. மேலும், இப்பொருள் தொடர்பாக மேற்படி பணியாளரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள நீதிப்பேராணை எண்கள் W.P.Nos.23191/2017, 14236/2020 மற்றும் 15424/2021 ஆகியவை நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(3) திரு.க.அழகுவேல் (62) (சேலம்) என்பவர் தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவில் பணியாற்றும் திரு.மு.ப.காரல் மார்க்ஸ் என்பவர் 01.10.1997 அன்று மாவட்ட மாறுதல் அடைந்துள்ளார். ஆனால் அவர் பணிமூப்பில் வரிசை எண். 38இல் இடம் பெற்றுள்ளார் என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் ஆட்சேபனை குறித்து, திரு.மு.ப.காரல் மார்க்ஸ் என்பவர் நாகப்பட்டினம் மாவட்ட நூலக ஆணைக்குழுவில் பதிவறை எழுத்தராக 15.07.1992 பணியில் சேர்ந்து, 05.04.1995 முதல் பயிற்சி பெறா மூன்றாம்

நிலை நூலகராகப் பதவி உயர்வு பெற்று, 31.12.1996-இல் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் இளங்கலைப் பட்டம் (B.L.I.S) தேர்ச்சி பெற்றுள்ளார்.

- மேலும், திரு.மு.ப.காரல் மார்க்ஸ் என்பவர் பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.7002/அ3/1997, நாள் 11.08.1997-இல் நாகப்பட்டினத்திலிருந்து தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு விருப்ப மாறுதல் பெற்றிருப்பினும், தஞ்சாவூர் - நாகப்பட்டினம் மாவட்டப் பிரிவினையின்போது தஞ்சாவூரில் பணியாற்ற தனியர் ஏற்கனவே விருப்பக் கடிதம் சமர்ப்பித்திருந்த நிலையில், பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.12135/அ3/1991, நாள் 11.02.1998-இன்படி மாவட்ட பிரிவினையில் விருப்ப மாறுதல் வழங்குவது குறித்து கருதப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை ஏற்று, பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.6783/அ3/2002, நாள் 03.10.2002-இன்படி, திரு.மு.ப.காரல்மார்க்ஸ் என்பவர் பயிற்சிபெறா மூன்றாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்த நாளாக 05.04.1995 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திரு.மு.ப.காரல்மார்க்ஸ் 31.12.1996-இல் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் இளங்கலைப் பட்டம் (B.L.I.S) தேர்ச்சி பெற்றுள்ளதைத் தொடர்ந்து, தனியர் 31.12.1996 முதல் பயிற்சி பெற்ற மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் பணிமூப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

* எனவே, தஞ்சாவூர் - நாகப்பட்டினம் மாவட்டப் பிரிவினையின்போது திரு.மு.ப.காரல் மார்க்ஸ் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீதான மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலரான பொது நூலக இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி தனியரது பணிமூப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மாவட்ட பிரிவினை ஏற்பட்டு 25 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், இயக்குநரின் செயல்முறை ஆணை குறித்து தற்போது காலம் கடந்து ஆட்சேபனைத் தெரிவிக்கும் பணியாளர்களது கோரிக்கையினை விதிமுறைகளின்படி ஏற்க வழிவகை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.
* (4) இரண்டாம் நிலை நூலகராக 29.09.2022 அன்று பதவி உயர்வு பெற்றுள்ள திரு. சி,ஆ, மோகனரங்கம், (147) தம்மை விட பணிமூப்பு பட்டியலில் இளையோருக்கு இணையாக (பணிமூப்பு பட்டியல் வரிசை எண்.125 முதல் 129 வரை) இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வு வழங்கி, இரண்டாம் நிலை நூலகர் பணிமூப்பு நிர்ணயம் செய்யுமாறு வேண்டியுள்ளார்.

மேற்படி பணியாளரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு W.P. No. 18141/2012 இன் மீது பெறப்பட்டுள்ள 14.08.2018 நாளிட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில், பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 7345/அ3/2018 நாள். 20.11.2018இன்படி இவருக்கு 01 .01 . 2006 முதல் முன்தேதியிட்டு, மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்தில் பணிமூப்பு நிர்ணயம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, பணிமூப்பு பட்டியலில் அவரை விட இளையோருக்கு இணையாக இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் தாள் வழி

பதவி உயர்வும், பணிமூப்பும் நிர்ணயம் செய்ய தனி கோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், இப்பணியாளரது கோரிக்கை தனியே பரிசீலிக்கப்பட்டு இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் பணிமூப்பு நிர்ணயம் செய்து தனி ஆணை வழங்கப்படும்.

5. மேலும் இரண்டாம் நிலை நூலகராக 29.09.2022 மற்றும் 01.10.2022 ஆகிய தேதிகளில் பதவி உயர்வு பெற்றுள்ள கீழ்காணும் நபர்கள், தம்மை விட பணிமூப்பில் இளையோருக்கு இணையாக இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வு வழங்கி, இரண்டாம் நிலை நூலகர் பணிமூப்பு நிர்ணயம் செய்யுமாறு வேண்டியுள்ளனர்.

| வ.எண் | பெயர் | இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வு | இளையோருக்கு இணையாக பணிமூப்பு கோரும் விவரம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஜெ. ஜோதி, (138), (நாகப்பட்டினம்) | 01.10.2022 | வரிசை எண். 118 முதல் 137 இல் உள்ள பணியாளர்களுக்கு ) இணையாக பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் வேண்டுதல் |
| 2 | திரு. அ. இளங்கோவன், (139) (கோயம்புத்தூர்), | 29.09.2022 | வரிசை எண். 119 முதல் 138 இல் உள்ள பணியாளர்களுக்கு) இணையாக பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் வேண்டுதல் |
| 3 | திருமதி.பா. அன்னப்பூரணி (143), (மதுரை) | 29.09.2022 | வரிசை எண். 120 முதல் 142 இல் உள்ள பணியாளர்களுக்கு ) இணையாக பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் வேண்டுதல் |
| 4 | திருமதி. ஜோ. நிர்மலாதேவி, (144), (மதுரை) | 29.09.2022 | வரிசை எண். 121 முதல் 143 இல் உள்ள பணியாளர்களுக்கு) இணையாக பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் வேண்டுதல் |

மேற்படி பணியாளர்கள் 10 ஆம் வகுப்பு முடித்து, அடிப்படைக் கல்வி (Foundation Course) தேர்ச்சி பெற்றுள்ளனர். +2 தேர்ச்சி பெறவில்லை. இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் தற்காலிகப் பணிவிதிகள் ஏற்படுத்தி வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.60, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 27.04.2006இன்படி, இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்திற்கான கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் CLIS தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில், பணிமூப்பு பட்டியலில் அவர்களை விட இளையோருக்கு இணையாக இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் தாள் வழி பதவி உயர்வும், பணிமூப்பும் நிர்ணயம் செய்ய தனி கோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், இப்பணியாளர்களது கோரிக்கை தனியே பரிசீலிக்கப்படும்.

(6) மேலும், பயிற்சி பெற்ற மூன்றாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்த நாள் / சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மாவட்ட விருப்ப மாறுதல் பெற்று புதிய மாவட்டத்தில் மூன்றாம் நிலை நூலகராகப் பணியேற்ற நாள் மற்றும் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்த நாள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, தகுதியுள்ள இடத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு பணிமூப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

7. இதனைத் தொடர்ந்து, மேற்காணும் பணிமூப்புப் பட்டியல் குறித்து சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து மாவட்ட நூலக அலுவலர்கள் மூலம் பெறப்பட்ட ஆட்சேபனைகள் / மறுப்புரைகள் மற்றும் அதற்கான பதில் விவரங்கள் மற்றும் பணிமூப்புப் பட்டியலில் உள்ள விடுதல் அல்லது பிழைகள் (Factual Errors) குறித்து

மாவட்ட நூலக அலுவலரால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சரிசெய்யப்பட்ட திருத்தங்கள் குறித்த விவரங்களின்படி, நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர்களின் சரிசெய்யப்பட்ட இறுதிப் பணிமூப்புப் பட்டியல் (Final Seniority List) இத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது. இதனை சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு தொடர்புபடுத்தி, அதன் விவரத்தை உடனடியாக இவ்வியக்கத்திற்குத் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. மேற்சொன்னவாறு

(ஒப்பம்) க. இளம்பகவத்

**பொது நூலக இயக்குநர்**

பெறுநர்

அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்

அனைத்து நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள்/ இரண்டாம் நிலை நூலகர்கள்

(மாவட்ட நூலக அலுவலர் வழிமுறையாக)

நகல்.:

கோப்பு/ முக்கிய ஆணைத் தொகுப்பு க் கோப்பு

// ஆணைப்படி //

1/3

பொது நூலக இணை இயக்குநர்